## அம்பலாந்தோட்டை பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 18 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டு நிறுவனம் தொடர்பான தகவல்கள் மற்றும் முதலீடு மற்றும் முதலீட்டு வட்டியினை கணக்கு வைக்கும் போது பின்பற்றப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் கைதவிர்க்கப்பட்ட மற்றும் ஏலமிடப்பட்டிருந்த ரூபா 760,753 தொகையான நிலையான சொத்துக்களின் கிரயமானது நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 543,546 தொகையான சொத்துக்கள் முலதனச் சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) தெபரதுடவ குறுக்கு வீதியினை அபிவிருத்தி செய்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா 55,826 தொகைக்காக கடன்பட்டோர் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொதுவான களஞ்சியம் மற்றும் மின்சார களஞ்சிய இருப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 96,479 தொகையான கொள்வனவுகள் மூலதன சொத்துக்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 2,008 இனால் குறைத்தும் அரச முறிகளின் மீதான முதலீட்டு வட்டி ரூபா 60,139 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், அரச முறிகள் மீதான முதலீட்டு வட்டி கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால், முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 60,139 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 10 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 717,879 கூட்டுத்தொகையான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

- (i) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்குரியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த ரூபா 1,737,341 தொகையான வரி வருமானம் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது.
- (ii) 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் வாகனங்களை வாடகைக்கு வழங்கியமைக்காக ரூபா 1,550,229 தொகையான பணம் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.
- (iii) 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய அபிவிருத்தி மானியங்களின் கூட்டுத்தொகை ரூபா 646,916 ஆகும்.
- (iv) மூன்று சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 59,580 கூட்டுத்தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

- (i) 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்காக செலுத்த வேண்டிய நானாவித கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,320,107 ஆகும்.
- (ii) உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,084,024 கூட்டுத்தொகையான கடன் தவணைகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.
- (iii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக தீர்வு செய்யப்படாத பொறுப்புக்களின் கூட்டு மொத்தம் ரூபா 18,660,699 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 63,346,956 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடு, பட்டோலைகள், வருடாந்த மதிப்பாய்வுச் சபை அறிக்கைகள் மற்றும் உரித்துறுதிகள்/கையளிப்புக் கட்டளைகளும் ரூபா 5,329,811 கூட்டுத்தொகையான நிலுவை வீத வரி தொடர்பான குத்தகைப்பதிவேடுகள் மற்றும் காலப்பகுப்பாய்வும், ரூபா 12,763,706 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பில் விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வும், ரூபா 94,995 கூட்டுத்தொகையான வாசிகசாலை வைப்புக்கள் தொடர்பான வைப்புப் பதிவேடுகள், விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்பட்டிராமையால், கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் விதி 217 மற்றும் 218 | சபைக்கு சொந்தமான, சபையினால் பயன்படுத்தப்படும் அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பில் தகவல்கள் உள்ளடங்கிய பீ.எஸ் 46 மாதிரியின் பிரகாசம் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு வருடாந்த மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 396 (ஈ) | வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவுகளுக்கு சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 15,345 கூட்டுத்தொகையான 03 காசோலைகள் தொடர்பில், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான ரூபா 756,547 தொகையான 18 வைப்பு மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது (i) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.3 (ஆ) மற்றும் (உ) பிரிவு | கடன் பணத்தை செலுத்தி முடிப்பதற்கும் ஓய்வூதியம் பெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 102,190 தொகையான இடர் கடன் தொகை மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்ட, பதவியிறக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையிலிருந்து நீங்கிச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக இருந்த ரூபா 236,269 கூட்டுத்தொகையான கடன் மற்றும் முற்பணத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,017,438 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,607,200 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 15,410,238 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் வருமானத்தில் 78 சதவீதமான உயர்வான பெறுமதியுடனான மீண்டெழும் செலவினமொன்று நிலவியது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வருமான உதவிகளில் கவனத்திற் கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்றினைப் போன்றே சுயமாக உருவாகும் வருமானத்திலும் அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டினைப் போன்றே முன்னைய இரு ஆண்டுகளினதும் சுயமாக உருவாகும் வருமானத்தினை மிகைத்து கவனத்திற் கொள்ளக்கூடிய அளவிலான உயர்வான பெறுமானத்தினால் மீண்டெழும் செலவினம் அதிகரித்திருந்தது.

### 2.3 செயற்படு மூலதன முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது நடைமுறை மற்றும் விரைவு விகிதங்கள் திருப்திகரமான நிலைமையை காட்டியது. எவ்வாறெனினும், நடைமுறை சொத்து மீதியினுள் ரூபா 41,752,369 தொகையான நிலுவை கடன்பட்டோர் மீதிகள் நிலவியமையால் விகிதத்தின் பிரகாரம் திரவத்தன்மையொன்று இல்லாதிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 45.85 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 25.78 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 56 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20.83 மில்லியனாக இருந்ததுடன், அவற்றுள் 9.75 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 47 சதவீதமாக இருந்தது.

#### 2.4.2 வீதவரியும் வரியும்

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 5,440,227 ஆக இருந்ததுடன்,ரூபா 3,496,717 தொகையான பட்டியலிடல்களுடன் ரூபா 8,936,944 தொகை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது. சபையின் பதவியணியிலுள்ள மூன்று வருமான பரிசோதகர்களுக்கு மேலதிகமாக மற்றுமொரு உத்தியோகத்தரும் வருமானப் பரிசோதகர் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக

ஈடுபடுத்தப்பட்டுள்ள போது 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவிற்கமைய நிலுவை வீத வரிகளை அறவிடுவதற்கு முறையாக நடவடிக்கைகள் எடுக்காமையால் பட்டியலிடல்களின் 42 சதவீதம் மற்றும் ஆரம்ப நிலுவை மீதியில் 39 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.4.3 குத்தகை வாடகை

2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்திக்கமைய கடை அறைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவையாவது மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகை வாடகை திருத்தப்பட வேண்டியதுடன், மேற்படி சுற்றறிக்கையில் 05 ஆம் இலக்க பந்திக்கமைய கடை அறைகளுக்கான உடன்படிக்கை ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் ஆலோகனைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 அனுமதிப்பத்திர கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 73,800 ஆக இருந்ததுடன், அந்த நிலுவையில் ரூபா 70,800 தொகை முன்னைய வருடங்களுக்குரியவையாகும். இந்த நிலுவைக் கட்டணங்களை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149, 150 மற்றும் 152 ஆகிய பிரிவுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.5 ஏனைய வருமானங்கள்

சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கியமைக்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 1,042,128 ஆக இருந்ததுடன், அந்த நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலுவை வருமானத்திற்கு 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளுக்குரிய ரூபா 954,128 தொகையான மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.4.6 விளம்பர பலகை கட்டண வருமானம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 (XXX) ஆம் பிரிவிற்கமைய அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள விளம்பர பலகைகளின் கட்டணங்களை அறவிடாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய நிலுவை அறிவித்தல் பலகை கட்டண வருமானம் ரூபா 222,300 ஆகும்.

### 2.4.7 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரினதும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணங்களுக்காக ரூபா 7,468,958 மற்றும் முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 8,647,000 தொகை பெறவேண்டியதாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

குழாய் கிணறு மற்றும் நீர் செயற்திட்டங்களுக்குரிய ரூபா 100,294 தொகையான இருப்புக்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது, 2004 மற்றும் 2008 ஆகிய வருடங்கள் தொடக்கம் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறமின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அம்பலன்தொட வாரச் சந்தையினை 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 6,651,300 தொகைக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக 2015 திசெம்பர் 18 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. குத்தகையாளரால் உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகையினை செலுத்தாமையினால் 2016 மே 31 ஆந் திகதி அந்த குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) 2016 மே 23 ஆந் திகதி மற்றுமொரு குத்தகையாளரால் ரூபா 2,345,000 தொகைக்கு சந்தை குத்தகையினை சேகரிக்கும் உரித்து கோரப்பட்டிருந்தமையால், 2016 மே 27 ஆந் திகதி அவருடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) முதலாவது குத்தகையாளரைப் போன்றே இரண்டாவது குத்தகையாளரும் மாதாந்த குத்தகைப் பணத்தை செலுத்தியிராததுடன், இரு குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 1,282,436 தொகையான தாமத தண்டப்பணமும், 2016 யூன் முதல் திசெம்பர் வரை விலைக்கேள்வி தொகை குறைவடைந்தமையால் ரூபா 455,000 தொகையும் உள்ளடங்கலாக ரூபா 1,737,436 தொகையான பணம் சபைக்கு இழப்பாகியிருந்தது.

**(ஆ) இருப்புப் பற்றாக்குறை**

2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் 15 பொருள் அலகுகளின் பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கு பொறுப்பினை சாட்டி அவற்றின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 திண்மக்கழிவு முகாமைத்துவம்

பின்வரும் வடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கழிவகற்றல் மற்றும் கூட்டெரு நிலையம் நடாத்திச் செல்லப்படும் காணி சபையினால் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒட்டுமொத்த அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினை உள்ளடக்கும் வகையில் கழிவு முகாமைத்துவம் இடம்பெற்றிராததுடன் கழிவு வரியினை விதித்து செலவினங்களை ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வாகனங்கள் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 1993 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலும் சபைக்கு கிடைத்திருந்த 04 வாகனங்களின் உரித்தினை கையேற்பதற்கு 2017 மே 19 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் ஒரு வாகனமும், 2014 ஆம் ஆண்டு முதல் மேலும் 03 வாகனங்களும் விளைவற்ற நிலையில் காணப்பட்டதுடன் அந்த வாகனங்கள் தொடர்பில் 02/2015 ஆம் இலக்க மற்றும் 2015 யூலை 10 ஆந் திகதிய நிதி அமைச்சின் சுற்றறிக்கைக்கு இணங்க பழுதுபார்த்து பாவனைக்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குரிய பதவியின் இரு உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 07 பேரின் மிகையொன்றும் 05 பதவிகளில் 08 பேருக்கான பற்றாக்குறையொன்றும் நிலவியது. மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதனைப் போன்று வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 26 செலவின விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 45,698,500 தொகையான மொத்த நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், 159 செலவின விடயங்களின் ரூபா 87,550,365 கூட்டுத்தொகையான சேமிப்புக்களும், 05 வருமான விடயங்களுக்குரிய ரூபா 72,462,000 தொகையான அடையப்படாத இலக்குகளும் காணப்படுவதால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபைக்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடைமுறைப்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும்முகாமைத்துவ குழுவொன்றினை தாபிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு